டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்றுதான் அனுமதிக்கப்படுவது என்றும், கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் இரண்டுதான் அனுமதிக்கப்படுவது என்றும் விதி இருந்தாலும்கூட, நண்பர் திரு. உமாநாத் அவர்கள் எடுத்துக் காட்டியதைப்போல, அவையில் அலுவல் முடிந்து கூட்டத்தொடர் முடிவடையும் நிலையில் ஆறு ஏழு நாட்கள் இருக்கும் நேரத்தில், சம்பந்தப்பட்ட பேரவை விதிகளைப்பற்றிப் பேரவையில் ஒரு தீர்மானம் கொண்டு வந்து, இரண்டுக்கு மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்களைக் கொண்டு வரலாம் என்பது, அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட ஒத்திவைப்புத் தீர்மானங்களை எடுத்துக் கொள்ளலாம் என்பது நீண்ட நாட்களாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. அதை நீங்கள் செய்வதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆய்வுக் குழுவைக் கூட்டி, தலைவர்களை எல்லாம் கலந்து என்ன செய்ய வேண்டுமோ அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க நான் முன்வருவேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

4. அறிவிப்புகள்.

(அ) மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டமன்ற மேலவைத் தலைவரிடமிருந்து கீழ்க்கண்ட செய்திகள் வரப்பெற்றுள்ளன.

1980-81 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்கள்.

1. திரு. சி. இராமலிங்கம்.
2. திரு. எஸ். ஆர். இராதா.
3. திரு. நீலநாராயணன்.
4. திரு. க. இராமமூர்த்தி.
5. திரு. செ. முத்துசாமி.

1980 ஆகஸ்ட் 5] (பேரவைத் தலைவர்)

1980-81 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை பொதுக் கணக்குக் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

1. திரு. எஸ். முத்து.
2. டாக்டர் தி. இரா. சனார்த்தனம்.
3. திரு. டி. சந்தோஷம்.
4. சோ. ஆறுமுகம்.
5. திரு. ஏ. ஆர். தாமோதரன்.

1980-81 ஆம் ஆண்டிற்கான சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழுவில் பணியாற்ற கீழ்க்கண்ட ஐந்து மேலவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள்.

1. திரு. ஈ. எஸ். வெங்கடேசன்.
2. திரு. ஜேப்பியார்.
3. திரு. ஆர். டி. சீத்தாபதி.
4. திரு. அ. நல்லசிவன்.
5. திரு. சி. ஆர். லெட்சுமிகாந்தன்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

ஆ. அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு நியமனம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு மற்றும் ஒரு அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக ஆட்சிக்குழுவிற்கு திரு. ஜே. சி. டி. பிரபாகரன் அவர்களின் பெயர் முறையாக நியமனம் செய்யப்பட்டுள்ளது. முறைப்படி நியமனம் செய்யப்பட வேண்டிய வேட்பாளர்களின் எண்ணிக்கையும் நிரப்பப் பட வேண்டிய வெற்றிடத்தின் எண்ணிக்கையும் ஒன்றாக இருப்பதால் திரு. ஜே. சி. டி. பிரபாகரன், பேரறிஞர் அண்ணா தொழில் நுட்பவியல் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு (Syndicate-க்கு) தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார் என நான் அறிவிக்கிறேன்.